எம்.சி.ஓ.பி. எண்: 6892 மற்றும் 6876/2016 (Joint Trial) தேதி : 22.4.2024

ம.சா. : 2

பெயர் : திரு. வினோத்குமார் (எனது மகள் தேனிஷா–என்பவருக்காக)

த/பெ. : திரு. தமிழரசன்

வயது : 34

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் எம்.சி.ஓ.பி. எண்: 6876/2016–ல் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். மேலும், என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 8 முதல் 10 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து குறித்து நான் கேள்வி பட்டதை தான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன். மருத்துவ செலவு குறித்த பில்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குழந்தையை ஜாக்கிரதையாக பிடித்து கொண்டு நடந்திருந்தால் இந்த விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. எனது மாமியாரின் கவனக்குறைவால் விபத்து நடந்திருப்பதால் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகைக்கு போதிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. எங்களுடைய அஜாக்கிரதையால் விபத்து நடந்ததினால் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.